IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.1/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SEVANDHI |
| HUSBAND'S NAME | : | VENKATESAN |
| VILLAGE | : | KONDAMPALLI |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 24th day of March 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கொண்டம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 16.08.2023 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் கொண்டம்பள்ளி புதுமனையில் உள்ள கெங்கயம்மன் கோவிலில் திருவிழாவின் போது நான் சாமிகும்பிட்டு கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னுடைய இடத்தில் வந்து நீ எவ்வாறு சாமிகும்பிடுவாய் என்று கேட்டு என்னிடம் பிரச்சனை செய்தார். எந்த தெவிடியா இங்கு வந்து சாமி கும்பிடதேவையில்லை என்று எதிரி கூறினார். நான் அவரிடம் திட்டவேண்டாம் என்று கூறினேன். அதற்கு எதிரி என்னுடைய இடத்தில் வந்து சாமி கும்பிடும் பெண்கள் அனைவரும் என்னுடன்ட படுத்தவர்கள் என்று அசிங்கமாக கூறினார். பின்னர் நான் அவரை திட்டியவுடன் எதிரி எனது மாராப்பை பிடித்து கையால் ஓங்கி எனது மார்பின் மீது குத்தினார். நான் அங்கேயே மயக்கமடைந்துவிட்டேன். பின்னர் என்னை அங்கிருந்தவர்கள் பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நான் சிகிச்சையில் இருந்தேன். அன்று இரவு எனது கணவர் வேலையில் இருந்து வந்தததும் அவரிடம் விவரம் சொல்லி புகாரை தயார் செய்து எனது கணவர் காவல் நிலையத்தில் அளித்தார். பிறகு நான் மேல் சிகிச்சைகாக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்து ஒரு நாள் சிகிச்சை பெற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் புகார் மனுவின் நகலில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று அ.சா.ஆ.1 புகார் மனுவினையும், தற்போது நான் காண்பித்த புகார் மனுவையும் அளித்தேன் என்றால் முதலில் எதிரி மீது அவரது மகன் மீதும் சேர்த்து புகார் அளித்தபோது எனது கணவர்

எதிரி மீது மட்டும் கொடுக்கசொன்னதால் அ.சா.ஆ.1 னை மட்டும் புகாராக அளித்தேன். சம்பவம் நிகழந்ததாக சொல்லப்படும் கோவில் உள்ள இடம் எதிரிக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. மேற்படி நிலம் எதிரிக்கு சொந்தமானது என்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அவர் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

அது எதிரிக்கு சொந்தமான நிலம் என்றாலும், அந்த நிலத்தில் எதிரிதான் கோவிலை கட்டிவருகிறார் என்றாலும் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கோவில் கட்டுமானம் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படம் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அங்கு கோவிலை கட்டி முடிக்கவில்லை என்றாலும் நான்தான் ஊர்மக்களை கூட்டிகொண்டு சென்று மாலை அணிந்து பிரச்சனை செய்து வந்தேன் என்றாலும் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் குறிபிட்டு சொன்ன அசிங்கமான வார்ததைகளை எனது மனுவில் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் நிலத்தையும் அதில் உள்ள கோவிலையும் அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நடக்காத ஒரு சம்பவத்தை குறித்தும் அவர் கூறியதாக வார்த்தைகளை மிகைப்படுத்தியும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு கோவிலின் பக்கத்தில் சொந்தமாக 2 வீடுகள் உள்ளது என்றாலும் எனது வீடு கோவிலுக்கு எதிரில் உள்ளது என்றாலும் சரியல்ல.

நான் எனது வீட்டில் பங்க கடை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி கடையில் நான் மது பானத்தை விற்பனை செய்த வருவதை எதிரி தான் காவல் நிலையத்தில் சொன்னால் என்று அவர் மீது பகைக்கொண்டு இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி பேர்ணாம்பட்டு தாலுக்கா அலுவலகத்தில் இரவு காவலாலியாக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிரி இலவச வீட்டு மனை பட்டா வாங்கி தருவதாக பொதுமக்களை ஏமாற்றினார் என்று நான் அவர் மீது செய்திதாள்களில் செய்தி கொடுத்தேன் என்றால் சரியல்ல.

நானும், எனது கணவரும் அந்த பகுதியை சேர்ந்த தீபா ஆகியோர் சேர்ந்து எதிரியின் கோவிலை அபகரிக்கவேண்டும் என்று பொய்புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது நண்பர் தீபா சம்பவ தினத்தன்று எதிரி தன்னை அடிக்கவந்ததாக மற்றொரு பொய்புகார் அளித்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் எதிரி என்னை திட்டி அடிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவில் குறிப்பிடாத அசிங்கமான வார்த்தைகயை எதிரி சொன்னதாக பொய்சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் கோவில் கட்டி முடிக்கபடவில்லை என்பதால் அந்த கோவிலுக்கு திருவிழா நடந்திருக்காது என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார் அளிக்க நான் எனது கணவர் வெங்கடேசன் தீபா, நாகராஜ், குமாரி ஆகியோர் சென்றிருந்தோம் என்றால் அவர்கள் சென்றிருந்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்தேன். பெருமாள் மற்றும் முனுசாமி ஆகியோரும் காவல் நிலையத்திற்கு சென்றார்கள் என்றால் சரிதான். வெங்கடேசன் எனது கணவர், தீபா பககத்து வீட்டை சேர்ந்தவர், நாகராஜ் எனது உறவினர் என்றால் சரிதான். பெருமாள் மற்றும் முனுசாமி ஊர் பெரியவர்கள் என்றால் சரிதான். அவர்கள் அனைவரும் காவல் நிலைத்தில் வைத்து கையொப்பம் செய்து

கொடுத்தார்கள் என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் இது குறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் மருத்துவமனையில் உள்நோயளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. மேல் சிகிச்சைகாக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு என்னை அனுப்பிவைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது தவறிவிழுந்ததால் சேலை கிழிந்து சிராப்பு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை பழி வாங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S/d-J.Jayganesh.,B.Tech.,B.L.,

Judicial Magistrate(FAC),
Gudiyatham.